(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை



4 சைவசமய பாடப்பரீட்சை : 2023

தரம் நான்கு

nselva.com

கால அளவு	1.00 மணி

புள்ளிகள் : 100

இல.
மாணவர் சுட்டெண்:

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

1. 1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.

1. சிவம் என்பதன் பொருள் யாது?

   1) சக்தி தருபவர் 2) நன்மை செய்பவர் 3) அருள் புரிபவர்

2. ''வெள்ளை எருதேறி'' காட்சியளிப்பவர்

   1) பிள்ளையார் 2) பிரம்மா 3) சிவன்

3. பல வரங்கள் பெற்ற அசுரன் யார்?

   1) இரணியன் 2) பிரகலாதன் 3) நரசிம்மன்

4. சைவசமயம் வலியுறுத்தும் பிரதான பண்பு யாது?

   1) மனநிம்மதி 2) ஒற்றுமை 3) இறை நம்பிக்கை

5. வேத சிவாகமங்களிலே விலக்கப்பட்டவை எவை?

   1) கொலை, உபாத்தியாயர் 2) உண்மை பேசுதல், களவு 3) களவு, பொய்பேசுதல்

6. திருக்கடவூர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள இறைவனின் பெயர்?

   1) கோணேச்சரர் 2) அமிர்தகடேஸ்வரர் 3) முன்னைநாதன்

7. ஆண்கள் ஆலயங்களில் செய்யும் நமஸ்காரம் எது?

   1) அட்டாங்க நமஸ்காரம் 2) பஞ்சாங்க நமஸ்காரம் 3) சூரிய நமஸ்காரம்

8. நாம் கோயிலை அண்மித்ததும் முதலில் வணங்க வேண்டியது?

   1) பலிபீடம் 2) நந்தி 3) கோபுரம்

9. பாண்டிய மன்னரின் முதலமைச்சராக விளங்கியவர்?

   1) திருஞானசம்பந்தர் 2) திருவாதவூரர் 3) ஞானபண்டிதர்

10. ஒளிவளர் விளக்கே எனும் திருப்பாடலைப் பாடியவர்?

    1) சேந்தனார் 2) சேக்கிழார் 3) திருமாளிகைத் தேவர்

(10 x 2 = 20 புள்ளிகள்)

2. பொருத்தமான பகுதிகளை தொடர்புபடுத்துக

1. சிவபெருமான் திருநடனம்	மாணிக்கவாசகர்
2. முத்திநெறி	திரிசுரன்
3. புனிதவதியார் பிறந்த இடம்	திருவாலங்காடு
4. அந்தணரின் பசியைப் போக்கியவர்	திருத்தம்பலேஸ்வரம்
5. நகுலேஸ்வரம்	காரைக்கால்

(5 X2=10 புள்ளிகள்**)**

3. பின்வரும் கூற்றுக்கள் யாரால்? யாருக்கு? கூறப்பட்டவை என எழுதுக?

1. உனக்கு பிரணவத்தின் பொருள் தெரியுமா?

   யாரால்..... யாருக்கு.....

2. உனது ஹரி எங்கே இருக்கிறான்?

   யாரால்..... யாருக்கு.....

3. ‘‘என் பசியைப் போக்க வேண்டும்’’

   யாரால்..... யாருக்கு.....

4. குதிரைகள் எங்கே?

   யாரால்..... யாருக்கு.....

5. பட்டரே இன்று என்ன திதி?

   யாரால்..... யாருக்கு.....

(5X2= 10 புள்ளிகள்**)**

4. பின்வருவனவற்றுக்கு சுருக்கமாக விடை எழுதுக?

1. தோப்புக் கரணம் போட்டு வழிபடப்படும் கடவுள் யார்?

   .....

2. பிள்ளையார் பிடிக்க பயன்படும் பொருள் ஒன்று எழுதுக.

   .....

3. சூரபத்மனை சம்ஹாரம் செய்த செயலை நினைவுபடுத்த அனுட்டிக்கப்படுவது?

   .....

4. இரணியனை அழிக்க திருமால் எடுத்த அவதாரம் யாது?

   .....

5. விபூதி தாரணம் எத்தனை வகைப்படும்?

   .....

6. பஞ்ச பூதங்கள் எவை?

.....

7. மழைக்கு அதிபதியான கடவுள் யாது?

.....

8. சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாளாகக் கொண்டாடும் பண்டிகை எது?

.....

9. நகுலேஸ்வரத்தின் மகோற்சவ தினம் எந்த மாதத்தில் நடைபெறுகிறது?

.....

10. பஞ்சபுராணம் ஓதும் போது மூன்றாவதாக ஓதப்படுவது எது?

.....

(10X2= 20 புள்ளிகள்**)**

5. கீழே தரப்படும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.

1. பாண்டிய மன்னன் திருவாதவூரரை சிறையில் அடைத்தான். .....
2. உடலால் செய்யும் கோயில் தொண்டு கிரியையைத் தொண்டாகும். .....
3. ''மாசில் வீணையும்'' என்ற தேவாரத்தை அப்பர் சுவாமிகள் பாடினார். .....
4. புனிதவதியார் தலையால் நடந்து சென்ற மலை பொதிகை மலை ஆகும். .....
5. திருமூலர் இலங்கையை சிவபூமி என்று போற்றி அருளினார். .....

(5X2= 10 புள்ளிகள்**)**

6. பின்வருவன பற்றி இரண்டு வாக்கியம் வீதம் எழுதுக.

1. தைப்பொங்கல்

.....

.....

2. சிவராத்திரி

.....

.....

3. சிவபெருமான்

.....

.....

4. விநாயகர்

.....

.....

5. ஆலய வழிபாடு

.....

.....

(5X2= 10 புள்ளிகள்**)**

7. பின்வரும் தேவாரங்களில் ஒன்றை வரிசைக்கிரமமாக எழுதுக.

1. மாசில் வீணையும் .....
2. மண்ணில் நல்ல வண்ணம் .....
3. பாலுக்குப் பாலகன் .....
4. சடையாய் எனுமால் .....
5. வேதம் ஓதி .....

(5 X2=10 புள்ளிகள்**)**

8. பொருத்தமான சொற்களை தெரிந்து எடுத்து இடைவெளியில் எழுதுக.

திருவாசகம்	அபிராமி அம்மை	தண்ணளிபுரம்	அரசு	திருப்புராணம்

1. பட்டர்..... மீது அளவற்ற பக்தி கொண்டவர்
2. பஞ்சபுராணம் ஓதும் போது ..... இரண்டாவதாக ஓதப்படும்
3. ..... மகாவித்தியாலயம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ளது.
4. கோயில்களில் தலவிருட்சங்களில் ஒன்றாக ..... வழிபடுகிறார்கள்.
5. ..... பாடியவர் சேக்கிழார் ஆவார்

(5 x 2 = 10 புள்ளிகள்**)**